


# காந்திநிகேதன் குரல்

# Voice of Gandhiniketan






## 75th Independence day of India, with great excitement and tribute to freedom fighters








டி.கல்லுப்பட்டி வட்டார சுதந்திரப் போராட்ட தியாகிகளை கௌரவப்படுத்தும் விதமாக ஆசிரம வளாகத்தில் சுதந்திர தின வெள்ளி விழாவின் போது நிறுவப்பட்ட நினைவுத் தூண்

(நமது ஆசிரம நிறுவனர் கோ.வேங்கடாசலபதி ஐயா அவர்களின் பெயர் முதலிடம் பெற்றுள்ளது)

**வாய்மையே வெல்லும்**

# E-MAGAZINE

Patron

**Prof. Dr. R. Venkataswami**
President, Gandhiniketan Ashram

**Advisors**

**Dr.V.Geetha**
Secretary, GNA

**Sri.M.Nagarajan**
Headmaster, GNGVHSS

**Smt.V.Muthumari**
Headmistress, GNGVPS

**Editorial Board Chairman & Hon.Editor**

**Prof. Dr. V. Ragupathi**
Member GNA

**Executive Editor Members**

Mrs. S. Saroja, Teacher

Mrs. J. Krishna Deepa, Teacher

Mr. S. Murali Krishnan, Teacher

Mrs. K. Vanitha, Teacher

Mr. R. Subbaiah, Art Teacher

Mrs. J. Kayalvizhi, Librarian

Mrs. B. Shalini, Teacher

## தலையங்கம்

ஒரு மனிதன் மாமனிதனாக உயர்வதற்கு அடிப்படைத்தேவை ஆளுமைத்திறனாகும். ஆளுமைத்திறன் என்பது ஒரு மனிதனுடைய குணங்களின் திறமைகளின் தொகுப்பாகும்.

பெற்ற பட்டங்கள் பல இருந்தாலும், தொழில்நுட்பம், கைவினைகள், கலை, பேச்சு, மொழி, விளையாட்டு முதலான திறமைகளும் முக்கியம் என்பதை நாம் அறிவோம். இந்தத் திறமைகளுக்கு அப்பாற்பட்டு ஒரு சொல் உண்டு அதுவே ஆளுமை.

"புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை

வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை"

ஆளுமை என்பது நம் தனித் திறமைகள் என்றில்லாமல், ஒட்டுமொத்தமாக நம்மை அடையாளப்படுத்தக்கூடிய ஒன்று. படிப்பால் திறமையால் ஒருவர் சிறந்த ஆளுமை உடையவர் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இந்த ஆளுமைத் திறன் ஒன்றே சாமானியனையும் நல்ல தலைவனாக்குகிறது. வலுவான ஆளுமை கொண்ட ஒருவர் எதிர்பாராத சூழ்நிலைகளை எதிர் கொள்வார். ஆளுமைக்கும் ஒழுக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

நல்ல ஒழுக்கம் நல்ல ஆளுமைக்கு வித்திடும்.பயிற்சிகள் மூலம் நல்லொழுக்கம் சாத்தியம். எப்பொழுது ஒழுக்கம் பழக்கமாக மாறுகிறதோ அப்பொழுது ஆளுமை மேம்படுகிறது.

ஒவ்வொரு மனிதனும் இறைப்பண்பு உடையவனே. அதை உணர்ந்து தன்னைத் தாழ்த்திக்கொள்ளாமல் எப்போதும் நம்பிக்கையோடு வாழ வேண்டும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள்.50).

என்பது குறள்.

எனவே வாழ்வாங்கு வாழ மனிதன் தன் ஆளுமைப் பண்பை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.அப்போது அவன் தன் உயர்ந்த இறைப்பண்பை உணர்ந்து உயர் நிலையை

அடைகிறான்.ஆற்றலின் அளவு எல்லையற்றது.

அதன் அளவைப் பெருக்க, விரும்பிப் பொறுப்புகளை ஏற்பது அவசியம். இதனால் தலைமைப் பண்பும் மேம்படும். மேம்பட்ட தலைமைப்பண்பு ஆளுமையைப் பெருக்கும்.தான்

மேற்கொண்டிருக்கின்ற செயல்திட்டத்தின் மீது மனதை ஒருமுகப்படுத்தி அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்படுகின்ற தன்மை ஒரு தலைவனுக்குத் தேவையானதாக இருக்கிறது.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணியர் ஆகப் பெறின். (குறள்.666)

என்ற குறள் இதற்குச் சான்று.

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது

தூக்கம் கடிந்து செயல். (குறள்.668)

ஏற்றுக் கொண்ட தொழிலை மனங்கலங்காமல் காலந்தாழ்த்தாமல் சோர்வில்லாமல் முயற்சியோடும் தன் மன உணர்வோடும் செய்ய வேண்டும் என்று வள்ளுவர் தன் குறள்வழி எடுத்துக் கூறுகிறார்.ஒரு மாபெரும் செயலைச் செய்துமுடிப்பதற்கு மனவலிமைதான் அடிப்படைக் காரணமாக அமைகிறது.சீரிய ஆளுமைப் பண்பு உடையவர்கள் எந்த ஒரு பிரச்சனையையும் துணிவோடு சமாளிக்க முடியும்.

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. (குறள்-382)

தான் எதிர்கொள்ளும் எந்த ஒரு பிரச்சினையைக் கண்டும் அஞ்சி ஒளிந்துவிடாது துணிவோடு சமாளிப்பது ஆளுமைக்குத் தேவையான சிறந்த பண்பு. தனக்குக் கீழ் செயல்படுவர்களின் தனித்திறனை அறிந்து அவர்களுக்குரிய பணிகளை ஒதுக்கீடு செய்வது தலைமைக்குரிய தனித்திறனாகும். இதனை வள்ளுவர்,

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல். (குறள்.517)

என்ற குறளில் கூறுகிறார்.

நல்ல ஆளுமை உடையவர் தம்மைவிடச் சிறந்தவர்களைப் பின்பற்றுவதை இழுக்காக எண்ணுவதில்லை.கண்மூடித்தனமாக யாரையும் பின்பற்றுவது மடமை. ஆனால், சிலர்

நம்மைவிடச் சிறந்தவர்களாக இருப்பார்களேயானால் அவர்களை நாம் பின்பற்றுவதில் தவறொன்றுமில்லை.

முக்கியமாக அவர்களைப் போட்டியாளராகக் கருதாமல் உரிய மரியாதையை அவர்களுக்கு வழங்கப் பழக வேண்டும்.அதேபோல் பேச்சுத்திறனும் சிறந்த ஆளுமைக்குத் தேவைப்படும் முக்கிய பண்பாகும்.

இதனை, சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (குறள்.647)

என்ற குறள் மூலம் உணர்த்துகிறார்.

"எழுமின் விழிமின்"

என்பது விவேகானந்தரின் கூற்று. அதுபோல் பிரச்சினைகள் வரும் முன்னே அவற்றை ஊகிப்பவர் நல்ல தலைவர் ஆகிறார். இதனால் பிரச்சனைகளின் பாதிப்பைக் குறைக்க முடியும். இதுவே ஒரு நல்ல ஆளுமைக்கு எடுத்துக்காட்டு. நல்ல ஆளுமை தன்னையும் வளர்த்துப் பிறரையும் வளர்க்கும். மற்றவர்களின் பலவீனங்களை விமர்சிக்காது ஏற்றுக்கொள்ளும்.

இது சிறந்த சமூக மேம்பாட்டுக்கு வழிவகுக்கும்.சாமானியனாக இருந்தாலும் நாட்டை ஆளும் தலைவராக இருந்தாலும் அனைவருக்கும் ஆளுமை திறன் இன்றியமையாதது.நாட்டின் முன்னேற்றம் மக்களின் ஆளுமைத் திறனைப் பொறுத்தது.

மனித உறவுகளை மேம்படுத்த வேண்டிய ஒருவர் சினம் என்னும் தீய பண்பை அறவே ஒழிக்க வேண்டும். இதனை வள்ளுவர்,

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும். (குறள். 306)

என்ற குறளில் எடுத்துக் கூறுகிறார். மேலும் தீய செயல்கள் பிறர்க்கு மட்டும் இன்றி நமக்கும் தீய விளைவுகளையே ஏற்படுத்தும்;

எனவே தீய எண்ணம் தீய செயல் போன்றவற்றை அறவே ஒழிக்க வேண்டும். இதனைத்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயனும் அஞ்சப் படும். (குறள்.202)

**என்று தன் குறள்வழி வள்ளுவர் எடுத்துக் கூறுகிறார். ஒருவர் நமக்குத் தீங்கிழைத்ததாக நாம் கருதினால் உடனே அவருக்குப் பன்மடங்கு தீங்கிழைக்க விரும்புகிறோம்.**

**எவ்வளவோ நல்ல செயல்கள் சாதனைகள் செய்வதில் நம் நேரத்தை செலவிடுவதை விட்டுவிட்டு அவருக்குத் தீமை செய்வதிலேயே நமது சிந்தனையையும் செயல்திறனையும் வீணாக்கும்போது நமது மன அமைதி சீர்குலைகிறது.**

**ஆளுமைத் திறன் சிறப்பாய் உள்ளவர்களால் மட்டுமே நெருக்கடியான சூழலிலும் சரியான முடிவை எடுக்க இயலும்.ஆகையால் தன்னம்பிக்கையும் தலைமைப்பண்பும் இருந்தால் நம்மை யாரால் வெல்ல முடியும்? நாம் வளர்த்துக்கொள்ளும் ஆளுமை நம் வாழ்வில் அதிசயங்களை ஏற்படுத்தும்.**

**உளவியலாளர் ஃப்ராய்டு ஆளுமை குறித்து உணர்த்துகையில் நடத்தையியலும் ஆளுமையியலும் இயைபுத்துறைகள் ஆகும் என்கிறார். நனவிலியே மனித ஆளுமையைத் தீர்மானிக்கிறது என்று ஃப்ராய்டு குறிப்பிடுகிறார்.**

**குழந்தைப்பருவ அனுபவங்கள் மனித ஆளுமையின் பெரும்பங்கு வகிப்பதாகக் குறிப்பிடுகிறார். ஆகையால் சிறுவயது முதலே குழந்தைகளின் ஆளுமையை வளர்ப்பதில் கல்விக்கூடங்களும் பெற்றோர்களும் ஆர்வம் செலுத்த வேண்டும்.**

**இக்கட்டான சூழலில் சிக்கித்தவிக்கும் இன்றைய உலகிற்கு நல்ல ஆளுமையே இன்றியமையாததாகிறது. ஆளுமையை வளர்ப்போம் ஆகச்சிறந்த செயல்களைச் செய்திடுவோம்.**

**மலர்க்குழு**

## கிருஷ்ண பக்தி




R.உமா

ஆசிரியை


திவ்ய தேசங்களில் திருக்கோளூா் வைத்தமாநிதி மங்களாசாஸனம் செய்யப்பட்டது. இந்த ஊருக்கு ஒருமுறை ஸ்ரீராமானுஜா் செல்லும் போது அவ்வூரிலிருந்து பெண்மணி ஒருத்தி அவ்வூரைவிட்டு வெளியே செல்வதைப் பாா்த்து காரணம் கேட்கிறாா்.

அதற்கு அப்பெண்மணி ஞானமற்ற நான் எங்கிருந்தால் என்ன என்று கூறும் அப்பெண்மணி அருளாளா்கள் 81 பேரின் அருஞ்செயல்களை எல்லாம் எடுத்துக் கூறி இவா்களைப் போல கிருஷ்ண பக்தி எனக்கில்லையே எனக்கு இப்பெருமாள் இருக்கும் ஊரில் வாழ என்ன தகுதி இருக்கிறது என்கிறாா். இராமாயணம், மகாபாரதம், பாகவதம், ஆழ்வாா்கள் வரலாறு தெரிந்த அம்மையாா் 81 வாக்கியங்களில் வைணவத்தை சாறாக பிழிந்து தருகிறாா். இதன் மூலம் நம் பாரதப் பெண்மணிகள் பாமரராய் இருப்பினும் கிருஷ்ண பக்தியில் மேதைகளாகவே இருந்துள்ளனா். அந்த 81 அருளாளா்களில் சிலரின் கிருஷ்ண பக்தியைக் காண்போம்.

“அகமொழித்து விட்டேனோ விதுரரைப் போலே!”

அஸ்தினாபுர மகாமந்திரி விதுரா். அவா் எப்பொழுதும் பகவத் தியானத்திலே இருப்பவா். கிருஷ்ண நாமத்தை ஜெபித்துக் கொண்டே இருப்பாா்.






30.07.2021 அன்று ஆசிரம ஆண்டுவிழா மற்றும் நிறுவனா் பிறந்தநாள் விழாவின்போது சிறப்பு பிராா்த்தனை மற்றும் ஆண்டுவிழா பொதுக்கூட்டத்தில் 13 வது இ-மேகசின் வெளியிடப்பட்டது.

பாண்டவர்களுக்கு உரிய நாட்டை துரியோதனன் கொடுக்க மறுத்தான். எனவே பாண்டவர்களுக்காக கண்ணன் அஸ்தினாபுரத்திற்கு தூது வந்தார்.

அவரை வரவேற்க பீமர், துரோணர், துரியோதனன், கர்ணன், விதுரர் போன்றோர் கூடியிருந்தனர். கண்ணன் தங்கள் வீட்டில் தான் தங்குவார் என்று ஒவ்வொருவரும் நினைத்தனர். அவரவர் என் வீட்டிற்கு வாருங்கள் என அழைத்தனர்.

ஆனால் விதுரரோ தங்கள் மாளிகைக்கு வாருங்கள் என்று கிருஷ்ணரை தன் வீட்டிற்கு அழைத்தார். யான் எனது எனும் அகங்காரமற்ற விதுரர் மாளிகையில் தங்கினார். விதுரரிடம் துளியும் அகந்தை இல்லை ஒருவர் இறக்கும் போது யாரை நினைத்தால் மோட்சம் கிடைக்குமோ அவரே இறுதியில் விதுரரை பார்க்க முடியவில்லையே என்ற வருத்தத்தில் மோட்சம் சென்றார்.

அப்பேர்ப்பட்ட விதுரரைப் போன்று எத்தகைய பேறு கிடைத்தாலும் அனைத்தும் அவன் செயல் என்று சிறிதும் அகந்தையின்றி வாழ்வதே சிறந்த கிருஷ்ண பக்தி அகம்பாவத்தை விட்டொழித்து பகவானை நினைத்து செய்யும் ஒவ்வொரு காரியமும் நமக்கு வெற்றியை மட்டுமே தேடித்தரும்.

“இருகையும் விட்டேனோ திரௌபதியைப் போலே!”

சூதின் கொடுமையை உரைக்க வந்த காவியமோ என்னும் அளவுக்கு தன்நிலை இழந்து தருமர் சூதாடுகிறார். சூதின் போதையில் மதிமயங்கிய தருமர் வீடு, வாசல், நாடு, நகரம் அனைத்தையும் பணயம் வைத்துச் சூதாடி இறுதியில் தன் மனைவி பாஞ்சாலியை வைத்து தோற்கிறார்.

கௌரவர் சபைக்கு திரௌபதி துச்சாதனனால் இழுத்து வரப்படுகிறார். தனது கணவனாலும், சுற்றத்தாராலும், சபையோராலும் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை என்று உணரும் அவர். சகல ஜீவராசிகளுக்கும் ரட்சகனாக விளங்கும் துவாரகாபுரி அச்சுதனை அழைக்கிறார். சரணாகதி தத்துவத்திற்கு ஆறுபேர் சாட்சி பிரகலாதன், கஜேந்திரன், துருவன், அகல்யா விபீடணன் மற்றும் திரௌபதி.

முதலில் இரு கைகளினாலும் தனது மானம் போகாமல் மறைத்தபடி கண்ணனை வேண்டினாள் பின் ஒரு கையில் வணங்கியபடி ஒரு கையால் மானத்தை மறைத்து அலறுகிறாள். இறுதியாக முற்றிலும் அவனே கதி என்று இருகரங்களையும் தலைக்கு மேல் உயர்த்தி

‘‘கோவிந்தா’’ ! என்று அழைக்கும் போது கண்ணன் ரட்சிக்கிறார் அனைத்தையும் அவனிடம் தந்துவிட்டால் போதும் அவன் நம்மைக் காப்பாற்றுவான் என்பதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி இருக்கமுடியும்.

‘‘இனியதென்று வைத்தேனோ சபரியைப் போலே’’

சபரியைப் போல இறைவனுக்காக காத்திருந்தவர்களைப் பார்க்க இயலாது. மதங்க முனிவரின் சிஷ்யையான சபரி தள்ளாத வயதிலும் ராமன் நாளை வருவான் நாளை வருவான் என்று நெடுங்காலம் காத்திருந்து அவருக்கு (ராமனுக்கு) கைங்கர்யம் செய்து மோட்சம் அடைகிறார். வேதங்கள் எதுவும் படித்திராத ஒரு எளிய வேட்டுவப் பெண்ணிற்கு இப்பேறு கிட்டியது. மற்றவர்கள் கொண்டாட வேண்டும் என்று சபரி எதையும் செய்யவில்லை.

ஸ்திரீ தர்மத்தின்படி தன்னால் இயன்றதை விருப்பு வெறுப்பின்றி செய்தாள். ஊன் உறக்கம் தவிர்த்து ராம நாமத்தையே ஜபித்து மோட்சம் அடைந்தாள். சபரி மோட்சம் அடைவதற்கு ராமனே சாட்சியாய் இருந்தார். தாயே என்று ராமனால் அழைக்கப்பட்ட சிறப்புக் குரியவர். தூய்மையான எதிர்பார்ப்பு இல்லாத பக்திக்கு இதைவிட ஒரு சிறந்த உதாரணம் இல்லை.

**கொரோனா பரவல் காரணமாக 30.07.2021 அன்று ஆண்டுவிழா மாணவ மாணவிகள் இன்றி**



**ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் மட்டும் சமூக இடைவெளியுடன் கலந்து கொண்டனர். ஆண்டுவிழா நிகழ்வுகளின் ஒரு பகுதியாக சந்திவனத்தில் பஜனையில் கலந்து கொண்டபோது எடுத்த படம்.**

## நீண்ட ஆயுளுக்கு வித்திடும் ஜப்பான்

## நூறு வயதைத் தாண்டி....



வே.முத்துமாரி
ஆரம்பப் பள்ளி,
தலைமையாசிரியை

ஜப்பான் நாட்டில் ஒக்கினவோ என்ற தீவில் மக்கள் 100 வயதையும் தாண்டி, இளமையுடனும், புத்துணர்வுடனும் சந்தோஷமாக வாழ்கின்றார்கள். இவர்களை நேரில் ஆராய்ந்த போது, அவர்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் இருப்பதை கண்டார். அதை எழுத்தர், நமக்கு இவ்வாறு விளக்குகிறார். மருந்தில்லாத தானே உற்பத்தி செய்த காய்கறிகள், எளிய உடற்பயிற்சி, உறவினர் மற்றும் நண்பர்களின் இனிமையான நிகழ்வுகள்,


பண்டிகை நிகழ்சிசிகளின் கருத்து பரிமாற்றம் எப்பொழுதும் சுறுசுறுப்பாய் இருப்பதற்கு காரணமாக உள்ளது. இதனால் இத்தீவில் வாழும் மக்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக (கிராமமாக) திகழ்கின்றனர். செய்யும் வேலையை பாரமாக செய்யாமல், நகைச்சுவை உணர்விடனும், முழுஈடுபாட்டுடனும் செய்கின்றனர். இறைச்சி அதிகமாக உண்பது கிடையாது.

உன் வாழ்க்கை ஒரு அர்த்தத்துடன் இருக்க வேண்டும் என கூறுகின்றார்கள்.


1. உனக்கு பிடித்தமானது எது?
2. நீ எதில் திறமைசாலி?
3. அதில் வருமானம் வருகின்றதா?
4. அதன் மூலம் சமுதாயத்திற்கு நன்மை உள்ளதா?

ஒவ்வொருவரும் தனக்கு பிடித்தமான செயல் என்ன என்று கண்டறிந்து அதில் திறமையை வளர்த்து அதன் மூலம் ஈட்டிய பணத்தை வைத்து குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் வழி காட்ட வேண்டும். இதனால் ஜப்பான் நாட்டு மக்கள் 120 வயதிற்கும் மேலும் சந்தோசமாக வாழ்கின்றனர். நம் நாட்டிலம் 200 வருடங்களுக்கு முன்பு இந்நிலை இருந்தது. ஆங்கிலேய ஆட்சிக்குப்பின் சிந்தனை அற்றவர்களாக வேலையாட்களாகவே உள்ளனர்.

நம் நாட்டில் கல்வி முறையில் மாற்றம் வர வேண்டும். தனக்கு பிடித்தமானதை கற்க வழி வேண்டும். தன் பெற்றோருக்காகவும், சமுதாயத்திற்காகவும் பிடிக்காத ஒரு தொழிலை செய்யக் கூடாது. உனக்கான தொழிலை தேர்ந்தெடுத்து அதில் திறமையோடு பயணிக்கப் பழக்க வேண்டும். இதுவே மனித சமுதாயம் மேம்பட வழி வகுக்கும். இக் கட்டுரை படிப்பவர்களும், தனது வீட்டில் உள்ள குழந்தைகளுக்கு அவ்வாய்ப்பை ஏற்படுத்தினால் புதியதொரு சமூகத்தை உருவாக்கலாம் என கருதுகிறேன்.




**15.08.2021 அன்று Online வழியாக நமது ஆசிரமத் தலைவர் பேராசிரியர் டாக்டர் வேங்கடசாமி ஐயா அவர்கள் தலைமையுரையும், ஆசிரம நிர்வாகக் குழு உறுப்பினர் பேராசிரியர் பழனிதுரை அவர்கள் சிறப்புரையும் வழங்கினர்.**




**11.09.2021 அன்று நமது ஆசிரமத்தில் பூதானத் தந்தை வினோபா அவர்களின் பிறந்த நாள் பொது கூட்டத்தில் ஆசிரம தலைவர் பேராசிரியர் டாக்டர்.ரா.வேங்கடசாமி அவர்கள் தலைமையுரையும், வினோபா அவர்களுடன் பணியாற்றிய சமூக ஆர்வலர் திருமதி.கிருஷ்ணம்மாள் ஜெகன்நாதன் அவர்கள் சிறப்புரையும் Online வழியாக வழங்கியபோது எடுத்த படம்.**

## வாழ்க்கை சிந்தனை துளிகள்



R.சீதாலட்சுமி
ஆரம்பப் பள்ளி
ஆசிரியை

கால் நனையாமல் கடல்
கடந்தவர்கள் உண்டு.
வாழ்க்கையைக் கடந்தவர்கள் இல்லை!
உள்ளதை எப்போதும்
உளியாக வைத்துக்கொள்...
சிலையாவதும், சிறையாவதும்
நீ செதுக்கும் தன்மையை பொறுத்தது!
வாழ்க்கையில் ஒவ்வொரு
நொடியும் மகிழ்ச்சியாக வாழுங்கள்...
ஏனெனில் வாழ்க்கை நமக்கு
மறுவாய்ப்பு தரப்போவதில்லை!
பூவின் மொட்டுக்கள் போல
மௌனமாக இருக்காமல்...
மலர்ந்த பூக்கள் போல
எப்போதும் சிரித்துக் கொண்டே இருங்கள்!
வெற்றி பெறும் வரை குதிரை
வேகத்தில் ஓடு... வெற்றி
வந்த பிறகு குதிரையை விட
வேகமாக ஓடு... அப்பொழுதுதான்
வெற்றி உன்னிடம் நிலைத்திடும்!
அனைவருக்கும் வரலாற்றில்
ஒரு தனி பக்கம் உண்டு...
அந்தப்பக்கத்தை நிரப்புவதும்
காலியாக வைத்திருப்பதும்
அவரவர் முயற்சியில் தான் உள்ளது!
விரைந்து வந்தேன் என்பதில்
இல்லை. வீழ்ந்தாலும்
எழுந்து வந்தேன் என்பதில்
தான் உள்ளது நம் பெருமை..!

## என்ன செய்ய போகிறாய்

அவசர உலகம் என்று நாம் பெயரிட்டுக் கொண்ட உலகம் - எதை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கின்றது? தொழில் நுட்பங்கள் வளர்ந்து, விண்வெளி சுற்றி, பூமியை விட்டு வேற்று கிரகங்களுக்கு குடி போகவதற்கு தயார் ஆகிக் கொண்டு இருக்கின்றோம். பெருமை தான்! (இருப்பதை விட்டு விட்டு, பறப்பதற்கு ஆசைபட்ட கதையாய்!)



பரிமளா,
கல்வியாளர்

உட்கார்ந்த இடத்திலேயே இருந்து கொண்டு, உலகைச் சுற்றியதாக சொல்லி, 'ஞானகனி' பெற்ற பிள்ளையாரைப் போல, நம் எல்லோர் கையிலும் கனிணி .... உலகையே சுற்றி வருகின்றோம். பெருமை தான்!!

அம்மாபட்டியில் பிறந்தவர் - அமெரிக்காவில் வாசம்; அமெரிக்க அதிகார பதவியில் நம்மூர் பெண் கேட்டதெல்லாம் கிடைக்கும் கூகுள் - தலைமை நம்ம ஊர் சுந்தரபிச்சை ஊர் தெரிய , உலகம் அறிந்தவர்கள் தான் நம்மவர்கள். பெருமைதான்!!!

வீட்டில் மிதிவண்டி இருந்தாலே பெருமை பட்ட காலம் கரைந்து வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் உந்து உருளி இருக்கின்றது. பொருளாதாரத்தில் மிக வளர்ந்து விட்டோம் . பெருமையோ பெருமை தான்!!

பழைய சோற்று நீர் குடித்து வளர்ந்த நம்ம வீட்டு பெண்கள், சோறு ஆக்க மறந்து சோமோட்டோவை அழைக்கிறார்கள். பெருமையோ பெருமை!.

பெருமை பட எத்தனையோ வியங்களில் இரக்கத்தை மறந்தோம். உறவுகளை மறந்தோம் நல்லுணர்வுகளை இழந்தோம் என்பதை உணரவும் மறந்துவிட்டோம்.

"யாரேனும், நடைபாதையில் மயங்கி விழுந்து விட்டால் என்ன செய்வாய்" என்ற கேள்விக்கு, "ஓடிப் போய் முதலுதவி செய்வேன் என்ற பதில் வரும் என்று நாம் எதிர்பார்த்தால் நாம் முட்டாள். " கைபேசியில் வீடியோ எடுத்து முகநூலில் போட்டு 1000 லைக் வாங்குவேன் என்கிறார்கள் இன்றைய வாரைச் செல்வங்கள்.

உண்மையையும், சத்தியத்தையுமே நெஞ்சில் சுமந்தவர்கள் மகாத்மா காந்தியும், கர்ம வீரர் காமராசரும் இவர்களுக்கு பின் எந்த காமராசரும் வரவில்லை. காந்தி மகானும் பிறக்கவில்லை.

நாட்டு மக்களுக்காக, தம் வீட்டையும் துறந்தவர்கள் வாழ்ந்த மண் இது.! இன்று எங்கும் சுயநல வாதிகள் மட்டுமே நிறைந்துள்ளனர்.

இப்படித்தான் வாழவேண்டும் என்ற விதிநிலை மறந்து ‘எப்படியும் வாழலாம்’ என்ற மனநிலை வந்துவிட்டது மக்களுக்கு. சமூக அமைதி குலைந்து, அராஜகம், அட்டூழியங்கள் பெருகி வருகின்றதை தினசரி நாழிதழ்கள் உறுதி செய்கின்றன.

மிருகத்திலிருந்து பிறந்தவன் மனிதன் என்ற அறிவியல் கோட்பாட்டை திருப்பிப் போட்டு மனிதன் மாறிவிட்டான். மிருகத் தன்மையை வெளிக்காட்டிக் கொள்ளவே முனைகின்றான்.

சாப்பாடு முதல் சபை நாகரீகம் வரை நல்லன மறக்கப்பட்டு, மாறுபட்டு, மாற்றப்பட்டு சிதறிகிடப்பது மானிடத்தின் அழிவிற்கு தானோ? நம் தாத்தா, பாட்டி நமக்குக் கொடுத்த பசுமையான பூமியை நம் தாத்தா, பாட்டி நமக்குக் கொடுத்த பசுமையான பூமியை, நாம், நம் பேரன் பேத்திகளுக்கு எப்படி கொடுக்கப்போகின்றோம்.

தண்ணீரில் தத்தளிக்கும் சிங்கார சென்னையே ஒரு நல்ல உதாரணம் நாம் என்னென்ன செய்தோம் என்பதற்கு.

இயற்கையை எதிர்த்து வாழ முடியுமா? இயற்கையோடு இயைந்து வாழ கற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய சமுதாய சூழல் மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும் எனில் சமூகம் பற்றிய சிந்தனையும் சமுதாயம் பற்றிய எண்ணங்களையும் சீர் செய்ய முன்னவர்கள், பின்னவர்களுக்கு வாழ்ந்து காட்ட வேண்டும்.

எந்த ஒரு பெற்றோரும், “நான் என் பிள்ளைகளை நன்றாக வளர்ந்துவிட்டேன்” என்று பெருமை பாராட்ட முடியாது. நான் நன்றாக வளர்க்கவில்லை” என்று வருத்தப்படவும் முடியாது, பெற்றோர் நன்றாக வாழ்ந்தால் பிள்ளைகளும் நன்றாக வளர்வார்கள்.

வளரும் பிள்ளைகளுக்கு பாடம் தரவேண்டியதில்லை. இதைச் செய், அதைச் செய்யாதே என்று சொல்ல அவசியமில்லை. தாங்கள் உணரச் செய்வதே சிறந்த வழி. நம் பிள்ளைகளுக்கு முன் ஒரு கேள்வி வைப்போம். “நீ இப்போ அணிந்திருக்கின்ற சட்டை யாரால் கிடைத்தது? எப்படி வந்தது? நிறைய பதில்கள் வரும் துணிக்கடையில் துணி வாங்கி, தையல்காரர் தைத்தது.

அவர் தைத்த சட்டையில், பொத்தானும், அலங்கார துணியும் ஏதோ ஒரு தொழிற்சாலையில் 400 பேர் செய்த வேலையில் கிடைத்தது. துணியின் நிறம் எங்கோ ஒருவர் ஏற்றியது. நிறம் ஏற்றும் முன் ஏதோ ஒரு ஏழை நெசவாளி செய்தது. நெய்வதற்கு உள்ள நூலுக்கு பஞ்சு தேவை.

பஞ்சிற்கு தேவை பருத்தி. அந்த பருத்தியை விளைவித்தவன் வெயில், மழை பார்க்காமல், நேரம், காலம் காணாமல் உழைத்த, சட்டையே போடாத ஒரு ஏழை விவசயி, நம் எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் ஆரம்பம் விவசாயி மட்டுமே. அவனின்றி இங்கு ஒரு அணுவும் அசையாது. நும் குழந்தைகளுக்கு புரியவைப்போம்.

இந்த ஒரு சட்டைக்கே இத்தனை பேருடைய சேவை, தேவையாக இருக்கின்றது. இவர்களுக்கெல்லாம் நாம் எவ்வளவு கடமைபட்டுள்ளோம். சமுதாயத்தில், இப்படித்தான் நாம் பல பேருக்கு கடன் பட்டுள்ளோம். பெற்றது தாய், தந்தையாக இருந்தாலும் நம்மை செதுக்குவது நாம் வாழும் சமுதாயமே! அந்த சமுதாயத்திற்கு நீ என்ன செய்ய போகிறாய்? பட்ட கடனை எப்படி ‘நேர்’ செய்யப் போகிறாய்?


உங்கள் குறிக்கோள்கள், சிந்தனைகள் செயல்கள்’நேர்’ படட்டும். உங்கள் சிந்தனைகள் உங்களுக்கு நல்ல வழி காட்டும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வை முன்னெடுப்போம். வளர்வார்கள், வாழ்வார்கள் நம் மக்கள்!


வாழ்த்துவோம்!!





நவராத்திரி விழாவினையொட்டி நமது ஆசிரம வளாகத்தில் வைக்கப்பட்ட கொழு





**தை பொங்கலை முன்னிட்டு போகிப்பண்டிகை நாளான 12.01.2022 அன்று பள்ளியில் கோலப் போட்டி நடத்தப்பட்டது.**




**28.04.2022 அன்று ஆசிரமஅடிக்கல் நாட்டிய தினத்தள்று நடந்த பொதுக்கூட்டம்**

## Why Should We Study English?

When our nation became free there was a demand from many people that English should be banished from our land. It was the language of our rulers. It was a painful remainder of our slavery.



**J.Krishnadeepa**
**Teacher**

Experience has taught us that English is not a subject, but a language only. It is not the second language of our administration.

We are living in a well inter linked world. No one can live like a frog in the well. If anything happens in one corner of the world however reote, it is bound to have its effect on all countries. The Presidential election is US, the devaluation of the Franc or the strike in the industries every one of these events has an impleasant effect to for and wide.

Its echoes are heard in the remotest corners of the world. Allthis means that we have to be increasingly of the world events. We should have our contacts with the outside world and the best medium of this contact is the English language. It is therefore the great window for us to look at the world outside.

Luckily this language is no stranger to us. Our contact with itis now two hundred year old. We shall have, therefore not much difficulty in widening its appeal. If we were ever to abolish this language it will not only mean starting afresh but we should be throwing away a jewel.

English is a language which embraces the priceless treasures of science and technology art and literature. Science cannot develop very fast without this language. In Literature the translations from English have enriched the language. For all these reasons it will be wise and predent for us to study this priceless language.

## மரம் ! மண்ணுக்கு வரம் !!!

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன் உடையான்கண் படின்"  .. திருக்குறள்

மரங்களின் பெருமை சொல்லில் அடங்காது. பொதுவாக மரப் பயிர்கள் எல்லாம் ஆண்டாண்டாய் இருப்பவை.



திரு.பாமயன்
இயற்கை வேளாண் அறிஞர்

இவை நீடித்து நமக்கு பயன் கொடுத்துக் கொண்டு இருக்கும். ஆண்டுப் பயிர்களைவிட இவற்றின் வருவாய் நீடித்தது மட்டுமல்லாது இதற்கு நாம் செய்யும் செலவும் மிகவும் குறைவு. பல்வகை மரங்களை பின்வரும் தன்மைகள் கொண்டு தேர்வு செய்ய வேண்டும்:

* கால்நடைகளுக்கு தீவனம் கொடுப்பவை
* மட்கு தயாரிக்க தழைகள், கூளங்களைக் கொடுப்பவை
* விறகு கொடுப்பவை
* கட்டுமானப் பொருள்களைக் தருபவை
* மருந்துப் பொருள்களைக் கொடுப்பவை
* நிழல் கொடுப்பவை
* காய், கனிகளைக் கொடுப்பவை
* வறட்சியைத் தாங்கக் கூடியவை
* உள்ளூர்ச் சூழலுக்கு ஏற்றவை

இப்படியாக பல்வகைப் பயன்களைக் கொடுக்கும் மரப்பயிர்களை தேர்வு செய்து நாம் நமது பண்ணைக்குள் நடவு செய்து கொள்ள வேண்டும்.

ஒருமுறை நடவு செய்து ஓராண்டு பாதுகாத்து வளர்த்துவிட்டால் போதும் பல ஆண்டுகளுக்கு இவை பயன் கொடுத்துக் கொண்டே இருக்கும். இதில் கவனிக்க வேண்டிய மற்றொரு செய்தி, இந்த பல்வகை மரங்கள் எல்லா மாதங்களிலும் ஏதாவது ஒருவகைப் பயனைக் கொடுத்துக் கொண்டு வரும். இதனால் நமக்கு மாதந்தோறும் வருவாய் கிட்டும் வாய்ப்பும் உண்டு.

மேலே கூறிய ஏதாவது ஒரு வகையில் ஏதாவது ஒரு பயன்பாட்டுக்கு அது உதவும்.பல்வகை மரங்கள் நமது பண்ணையில் ஒரே காலத்தில் துளிர்விட்டு ஒரே காலத்தில் இலை, தழைகளைக் கொடுப்பது கிடையாது. எடுத்துக் காட்டாக கோடையில் நமக்கு தீவனப்

பற்றாக்குறை நிலவும். அப்போது கால்நடைகளுக்கு உணவு கிடைப்பது கடினம்.

ஆனால் அந்தச் சமயத்தில் வேப்ப மரம் நன்றாக துளிர்விட்டு தழைகளைக் கொடுக்கும். அவற்றை ஆட்டுக்குக் கொடுத்துப் பழக்கிவிட்டால் அவற்றை ஆடுகள் நன்கு உண்ணும். வேப்ப மரத்தைப் பொருத்த அளவில் தமிழகத்தில் 90 விழுக்காட்டுப் பகுதியில் வரும். கடும் வறட்சியைத் தாங்கி நிழல் தரும்.

மழைக் காலத்தில் விதை போட்டாலே போதும், நீர் ஊற்ற வேண்டிய தேவைகூட இல்லை.

இப்படிப்பட்ட மரங்கள் பல உள்ளன. இவற்றை வளர்த்துவிட வேண்டும். வேப்ப மர இலைகள் பனிக்காலத்தில் கருகத் தொடங்கும் அப்போது இலவ மரம் நன்கு பச்சைத் தழைகள் கொடுக்கும்.

இப்படியாக தொடர்ச்சியாக நமக்குத் தழைகள் கிடைக்கும். இத்துடன் ஆடுகளை நாம் இணைத்துக்கொண்டால் நமக்கு வருமானம் உறுதி செய்யப்பட்டுவிடும்.

இப்படியாக பல்வகை மரங்கள் ஒரே சமயத்தில் பூப்பதும், காய்ப்பதும், இலை கொடுப்பதும் மாறி மாறி நடப்பதால் நமது பண்ணை ஆண்டுதோறும் பசுமை மாறாமல் இருக்கும்.

இச்சி, ஆல், அரசு, மூங்கில் போன்றவையும் வேம்பைப் போல கோடையில் நல்ல இல தழைகளைக் கொடுக்கும். இவை கால்நடைகளுக்கு நல்ல தீவனமாக இருக்கும். வறட்சியில் நமக்கு ஏற்படும் தீவனப் பற்றாக்குறையை இதன் மூலம் தீர்த்துவிட முடியும்.

இன்றும் மலைவாழ் பழங்குடி மக்களிடம் இந்தத் திறன் காணப்படுகிறது.

இப்படியான மரங்களை பண்ணையில் வரப்புகளிலும், வேறு பயிர்கள் இல்லாத வெற்று இடங்களிலும், தரிசுகளிலும் நடலாம்.

அது மட்டுமல்லாது 30 அடி இடைவெளியில் இந்த மரங்களை நட்டு, 20 அடிக்கு மேல் கிளை பரப்பாமல் வெட்டிக் கொண்டு வந்தால், நாம் பயிர் செய்யும் பரப்பில் நிழல் பரவாமல் பார்த்துக் கொள்ளலாம்.

அத்துடன் நாம் பருவகாலப் பயிர்களான நெல், சோளம் போன்றவற்றை பயிர் செய்யும்போது பசுந்தழைகளாக மர இலைகளை வெட்டிப் போட்டு பயிர் செய்யலாம். இதனால் நிழலும் இருக்காது, மண்வளமும் பெருகும்.

காட்டில் வளரும் சந்தன மரம் முழு வளர்ச்சி அடைய சுமார் 40 முதல் 60 ஆண்டு காலம் எடுக்கும். அதே சந்தன மரத்தின் அருகில் அகத்தி மரங்களை வளர்த்தபோது 11 ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடைந்துள்ளதை ஆஸ்திரேலியாவில் உள்ள ஆய்வாளர்கள் நிறுவி உள்ளனர். காட்டுச் சந்தன மரத்தில் இருந்து கிடைக்கும் அதே அளவு நறுமண எண்ணெயும் தரமும்

உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர் அந்நாட்டு அறிவியர்கள்.

<u>கால்நடைத் தீவன மரங்கள்:</u>

அகத்தி, மலை வேம்பு, மலைக் கிளுவை, பூவரசு, முருங்கை, முள்முருங்கை(கல்யாண முருங்கை), சூபாபுல், உதியன், வாகை அல்லது வாதமுடக்கி, துலுக்க வேம்பு போன்றவை.

<u>மட்கு எருத் தழைக்கான மரங்கள்:</u>

சீமைக் கொன்றை (கிளிரிசிடியா), புங்கன், வேம்பு போன்றவை

<u>விறகுக்கு:</u>

நொச்சி, மலைப் பூவரசு, சூபாபுல், உசிலை, புளி போன்றவை

<u>கட்டுமானத்திற்கு:</u>

வாகை, ஈட்டி, சவுக்கு, தேக்கு, தடிசு, முள் இலவு, மூங்கில், ஆய் போன்ற மரங்கள்

<u>மருத்துவப் பயன் மரங்கள்:</u>

நொச்சி, வேம்பு, வில்வம், அத்தி, சாதிக்காய், மாசிக்காய், கடுக்காய், நெல்லி, வேம்பு

<u>நிழல்:</u>

ஆல், அரசு, பூவரசு, புங்கன் போன்றவை

<u>கனிகள்:</u>

மா, பலா, எலுமிச்சை, சப்போட...கொய்யா, நாவல், பப்பாளி

இவை மட்டுமல்ல இன்னும் கணக்கற்ற மரங்களை இயற்கைத் தாய் நமக்கு வழங்கி உள்ளாள். அவற்றை நாம் தெரிந்தெடுத்து நமது பண்ணைக்குள் கொண்டு வரவேண்டும்.

பொருத்தமான இடத்தில் பொருத்தமான மரங்களை நட்டு இணக்கமான பயிர்களை நடவு செய்து ஆண்டு முழுவதும் பயன்பெறலாம்.

இணக்கப் பயிர்கள் என்றால் வெற்றிலைக்கு அகத்தி, முள் முருங்கை போன்றவற்றையும், மஞ்சளுக்கு அகத்தி, செம்பை, ஆமணக்கு போன்றவற்றையும் கூறலாம்.

இந்த அறிவுக் களஞ்சியம் இன்னும் வயதான மூத்த தாத்தா, பாட்டிகளிடமும் மலைவாழ் பழங்குடி மக்களிடமும் கேட்பாரற்றுக் கிடக்கிறது. இதை நமது ‘அறிவியல்’ உலகம் புறக்கணித்தவிட்டது. நாம் அதைத் தேடித் திரட்ட வேண்டும்.

அதிகமான வெயில் உள்ள இடங்களில் நுண்காலநிலையை ((Microclimate) உருவாக்க இந்த மரப்பயிர் சாகுபடி பயன்படும்.

பரவலாக மரங்களை நட்டு போதிய நிழற்குடைகளை அமைத்துவிட்டால் செயற்கை நிழல்வலைகளுக்கு நாம் தேவையில்லாமல் செலவு செய்ய வேண்டியதில்லை. இந்த நிழல்வலையின் கீழ் தக்காளி, மிளகாய், பாகற்காய், கத்தரி போன்றவற்றை சாகுபடி செய்யலாம்.

இதன் விளைச்சலும் அதிகமாகும்.

அதுமட்டுமல்லாது மலைப் பகுதிகளில் மட்டும் தான் வரும் என்று கருதக்கூடிய காரட், காப்பி, முள்ளங்கி, பீட்ரூட் போன்ற காய்கறி களையும் விளைவிக்க முடியும்.

ஒவ்வொரு மரத்தின் மீதும் மிளகு, வெற்றிலை, சீந்தில், சிறுகுறிஞ்சான் போன்ற கொடிகளைப் படரவிடலாம். அத்துடன் எல்லாப் பருவங்களிலும் நாம் பயிர் செய்ய முடியும்.





21.06.2022 அன்று உலக யோக தினத்தன்று நடந்த மாணவ மாணவியரின் ஆசனபயிற்சி

## இறையன்புவின் சிந்தனை வானம்

### (விழிப்புணர்வு)



B.விமலா, ஆசிரியை

வாழ்க்கையில் ஒரு மனிதன் உயிர்த்துடிப்போடு இருந்திருக்கிறான் என்பதற்கு அடையாளம் அவன் விழிப்புணர்வோடு இருப்பதுதான். விழிப்புணர்வு என்பது தனிப்பட்ட முயற்சி. கற்றுத் தருவதற்கும் அப்பாற்பட்டது. வகுப்பு முழுவதும் ஒரே பாடம்தான் சொல்லித் தரப்படுகிறது. சிலர் மட்டும் அதிக மதிப்பெண் பெறுகிறார்கள்.

ஆனால் வேறுசிலர் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். அவசரம், வேகம் எல்லாம் நமது விழிப்புணர்வைத் தின்று விழுங்கி விடுகின்றன. ஒரு கடிதத்தைக் கூட, சிற்பி சிலை வடிப்பதைப் போல் கவனமாகச் செய்கிற பக்குவம் உடையவர்களால் தான் நாள் முழுவதும் விழிப்புணர்வோடு இருக்கமுடியும்.

விழித்திருப்பது என்பது விழிகள் சம்பந்தப்பட்டதல்ல மனம் சம்பந்தப்பபட்டது. உள்ளுணர்வுடன் தூங்குபவன் விழித்தெழுந்ததும் அடிக்கடி கொட்டாவி விடுவதில்லை. விழிப்புணர்வையும், தன்னம்பிக்கையையும் விலை கொடுத்து வாங்க முடியாது. யார் தூங்குகிறபோது அழகாக இருக்கிறார்களோ, யாரிடம் தூக்கத்தில் ஒரு அமைதி தவழுகிறதோ அவர்கள் விழித்திருக்கும் போது அதீத விழிப்புணர்வோடு இருப்பார்கள். இழந்ததற்காக வருத்தப்படாமல், அடைந்ததற்காக, அதுவும் இழந்ததன் மூலம் அடைந்ததற்காக மகிழ்ச்சியடைபவன் தான் விழிப்புணர்வுடையவன். வருத்தப்படுவதால் இழந்தது திரும்பக் கிடைப்பதில்லை.

## இமயம் இடுப்பளவே

விடைகள் இல்லாக்
கேள்விகள் இல்லை
வீணாய் வருந்தாதே
தடைகள் ஆயிரம்
வந்தாலும் மனத்
தளர்ச்சி அடையாதே
பாவி நான் என்
விதியே இதுவென
பதறிக் கிடக்காதே
உலகம் சாவி இல்லாமல்
பூட்டு செய்ததாய்
சரித்திரம் இல்லை
மிரண்டு அஞ்சி

ஓடுவதற்கா இங்கே
நீ வந்தாய்?
இறைவன் உனக்கொரு
விதி செய்துள்ளான்
என்பதை மறவாதே
சிங்கத்தின் குட்டி
மதி மயக்கத்தால்
எலிக்குட்டி ஆகிடுமோ?
பசும் தங்கத்தைக் காட்டிலும்
மதிப்புணக்குண்டு-செறும்
தகரமென எண்ணம் கொள்ளாதே.
வாழ்வில் துன்பம்
வருவது இயற்கை

| | |
|---|---|
| அதற்கேன் வருந்துகிறாய்?<br>தோளைத் தட்டி<br>எழுந்து நின்றால்-நீ<br>தோற்பாயா? தோல்வியிடம்<br>பண்பும், பணிவும்<br>உண்மையும் நேர்மையும்<br>மனதிற்குறுதி தரும்<br>நெஞ்சில் வஞ்சமும், பொய்யும்<br>புரட்டும் உன்னிடம் இருந்தால்<br>அது உன்னை நெருப்பாய் அழிக்கும்<br>சல்லடையாலும் நிரப்பி | எடுத்து வரலாம் நீரை-அது<br>மெல்ல உறைந்து பனியாகும் வரை காத்திட<br>மனமிருந்தால்<br>வெறும் கையோடு இருக்கிறேன்<br>என நினைப்பது மூடத்தனம்<br>உன் இரு கைகளில் இருக்கும்<br>பத்து விரல்களும் உந்தன் மூலதனம்<br>பொறுமையும், உழைப்பும்,<br>பூரண நம்பிக்கையும்<br>இறைவன் உன்னுள் இருப்பதை – நீ<br>உணர்ந்தால் - உன் இடுப்பளவே இமயம். |



**நமது ஆசிரமத்தில் மாட்டுப்பொங்கல் விழா 15.01.2022 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அன்றைய தினம் ஆசிரம மாட்டுப் பண்ணை முன் பொங்கல் வைத்து சிறப்பு பூஜை செய்யப்பட்டது.**






## இந்தியாவின் கை விளக்கு
## (தூய மகான்)



சு.காவேரி
ஆசிரியை

உலகத்தின் மாபெரும் தலைவர்களுக்கிடையில் காந்திஜிக்குத் தனி இடம் உண்டு. தத்துவஞானி, தூயமகான், தொழுதற்குரிய ஆசான், சக்தி வாய்ந்த எழுத்தாளர், ஆணித்தரமான பேச்சாளர், ஆயினும் அவர் அடக்கம் குடிகொண்டவர், செயல் வீரர்.


அனைவருக்கும் அவர் அன்புத்தந்தை, அரிய நண்பர். வையகத்தில் மிகவும் வல்லமை வாய்ந்த ஒரு பேரரசையே அவர் ஆட்டி வைத்தார். வைசிராய்களுடனும், மாமன்னர்களுடனும் சரிசமமாகப் பழகினார், என்றாலும் கதி இல்லாத பரம ஏழையைப் போல் வாழ்ந்தார். அவர் ஏழை பங்காளர். ஆனால் நாட்டின் முடிசூடி வேந்தரான காந்திஜி கையால் நூற்று கையால் நெய்த எளிய கதர்த்துணியையே விரும்பி அணிந்தார்.

கௌதம புத்தருக்குப் பிறகு இந்தியாவில் தோன்றிய மகான்களில் அவரே தலைசிறந்தவர் என்று கருதுகிறார்கள். ஆனால் காந்திஜி புத்தரை விடப் பெருமை வாய்ந்தவர் அல்லவா? அவர் நமக்காக அருளிய அற்புதக் கருத்துக்களில் சில எவன் ஒருவன் தனக்குத்தானே கட்டுப்பபாடுகளை ஏற்படுத்திக் கொண்டு, கடைபிடித்து வருகிறானோ அவனே சுதந்திரமானவன்.

தியாகம் தான் சிறந்த வீரம் அந்த வித்தையின் ஆதியும் அந்தமுமே பிரார்த்தனைதான். துன்பப்படும் உயிர்களுக்கு செய்யும் பணியாகும். கண்களை இழந்தவன் குருடனல்ல. எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிறானோ அவனே குருடன்.

கதரில்லாத சுதேசியம் உயிரில்லாத உடல் போன்றது. அன்பு எங்கிருக்கிறதோ அங்கே கடவுள் இருக்கிறார். நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் உள்ளத்திற்கும், உலகத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள். காந்திஜி வழி ஒரு தனிவழி.

## பண்ணை



ஐயா.மம்மது

சங்கத் தமிழானது இயல், இசை, நாடகமென மூன்று வகையாகும். இதில் இசை என்பது தமிழிசையாகும். பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளரத் தொடங்கின. இசை, கூத்து ஆகியவற்றின் கலை நுட்பங்களை விளக்கும் இலக்கணத் தமிழ் நூல்கள் எழுந்தன. இந்நூல்கள் எழுதப்பட்ட காலம் முச்சங்க காலமென அறியப்படுகிறது. இம்முச்சங்க காலம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. எனவே தமிழர் இசையும் கூத்தும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்விய கலைகளாக விளங்கின என உறுதியாகக் கொள்ளலாம்.

தமிழிசையில் முக்கிய இடத்தை வகிக்கும் இன்றியமையாத சொற்களில் ஒன்று 'பண்ணை' என்பதாகும்.

'பண்ணை, ஆயம்' என்பது குழு, கூட்டம், கூத்து (நாடகம், நாட்டியம்) என்பதைக் குறித்த சொல். மேலும் மகளிர் விளையாட்டையும் குறிப்பது இச்சொல். சிலம்பின் 'ஆயத்தார் சொல்' இதற்கோர் சான்று ஆகிறது.பல்வேறு விளையாட்டுகளிலிருந்தே ஆடல்கள் தோன்றியுள்ளன.'கெடவரல், பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு'என்பார் தொல்காப்பியர். (தொல்.802) 'ஆயம்' என்ற சொல் முல்லை நிலத்து நாகரிகம் தோன்றிய காலத்து மலர்ந்த சொல்.'ஆயம்' என்ற சொல்லில் 'ஆ' என்பது பசுவையும் 'ஆயம்' என்பது பசுக்களின் கூட்டம் என்ற பசு நிறையயும் குறித்தது.

எனவே 'ஆயத்தார்' என்பது குழுவினர் என்று பொருள்படும். 'ஆயம்' என்ற சொல்லிற்கு தோழி என்ற பொருளும் உண்டு. பண்ணை என்ற சொல் பண் என்பதிலிருந்து உருவானது. இதன் மூலப் பொருள் 'செய்' அல்லது 'உருவாக்கு' என்பது.

'பண்' என்ற சொல்லின் வேர்ச்சொல் 'பள்' என்பது. 'பள்' என்றால் 'செய்வது' என்று பொருள். 'பள்' என்ற சொல் வேளாண்மையைக் குறிப்பது. வேளாண்மையைக் கண்டுபிடித்தோர் பெண்களே. எனவே பள் என்பது முது தொன்மைச் சொல். இதிலிருந்தே 'பள்ளு' என்ற சொல் உருவாகியுள்ளது. 'பள்ளுப்பாட்டு (பள் ஏசல்)' என்றால் வேளாண்மைப் பாட்டு ஆகும்.

'பண்' என்ற சொல்லிலிருந்து பண்ணு, பண்பு, பண்ணியல், பாண், பாணர், பாணச்சி, பாணி, பணை, பண்ணை, பண்ணையம், தண்பணை, பண்ணத்தி, பணி, பண்ணியம், பண்ணவர், பண்டர்,

பண்டாரம், பண்ணல், பணு முதலிய சொற்களை நம் முன்னோர் உருவாக்கி உள்ளனர்.'பாண்' என்பது இசை, பாட்டு, பாணர் ஆகிய பொருள் தருவது.'பணை, தண்பணை' என்ற சொற்கள் பண்படுத்தப்பட்ட நிலத்தைக் குறிக்கிறது.இந்தப் பண் என்ற சொல்லிலிருந்து நாகரிகம் என்று பொருள் படும் பண்பாடு என்ற சொல்லை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

பண் - பண்பு + ஆடு = பண்பாடு.பண்ணை என்றால் கூட்டம், குழு என்ற பொருள் கொண்டது என்று பார்த்தோம். ஏராளமான சொத்துக்களும் நிலங்களும் கொண்டவரைப் பண்ணையார் என்றும். ஏராளமான மாடுகளைக் கொண்ட கூட்டத்தைப் பண்ணை மாடு என்றும் அழைக்கிறோம்.

பண்ணை என்பது கூட்டம். இதன் முதன்மைச் சொல்லான பண் என்பதும் கூட்டத்தையே குறிக்கும். தேர்ந்த இசைச்சுரங்களின் கூட்டமே, தொகுதியே பண் ஆகிறது.எனவே பண்ணை என்பது 'பாடி ஆடும் குழு' என்ற பொருளில் பண்டை நாட்களில் வழக்கில் ஆளப்பட்டுள்ளது.ஆகவே பண்ணை, ஆயம் என்பது பொதுவாக குழுவாக ஆடிப்பாடுதலைக் குறித்தது.

அந்த ஆடல், கூத்து, நாடகம் என்பதையும் குறிப்பது.'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்' என்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டின் முதல் நூற்பா (1195). அதற்கு பேராசிரியர் கீழ்கண்டவாறு உரை கூறுகிறார்.முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும், பாடலும் கண்டும் கேட்டும் என்பதாகும்.

'பண்ணைத் தோன்றிய' - விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றிய என்றும், 'பண்ணை உடையது' - பண்ணை என்றாயிற்று என்றும் இளம்பூரணர் கூறுவார்.இப்பண்ணையிலிருந்து உருவான பல்வேறு பாடல்களும், இலக்கியங்களும் ஏராளம்.

மகளிரின் கூட்டம், குழு என்பதைக் குறிக்கும் ஆயம், பண்ணை என்ற பண்டைய மரபிலிருந்து உருவானவை இவை. சிலப்பதிகார முதல் காதையான 'மங்கல வாழ்த்துப்பாடல்' என்ற மகளிரின் திருமண வாழ்த்து, பண்டைய மகளிர் குழுவாகப் பாடிய பண்ணை என்பதின் வழியாக வந்தது. இன்றும் பண்டைய வள்ளைப்பாட்டு, வரிப்பாடல் வகைகளான அம்மனைவரி, கந்துகவரி , ஊஞ்சல்வரி முதலியவை இப்பண்ணையிலிருந்தே பிறந்த இசைப்பாடல்கள்.
மாணிக்கவாசகர் பாடிய திரு அம்மானை, திருபொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேனம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல் முதலிய இலக்கியங்களுக்குத் தோற்றுவாய் இப்பண்ணையே.'ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தென' என்றும் 'பண்ணை பாய்வோள்' என்றும் சங்க இலக்கியத்துள் ஒன்றான ஐங்குறுநூறு இதைப்பற்றிக் கூறும்.

'பன் நெறிப்பண்ணை' என்று கல்லாடம் கூறுகிறது.'கீரை, பண்ணை மகளிர் விளையாட்டு' என்று திவாகரம் மற்றும் பிங்கலம் தெரிவிக்கிறது.

பண்ணை என்பதைப் பண் மற்றும் பண்ணிசை என்றே பரிபாடல் கூறும்.'வண்ணவண்டு இமிர்க்குரல் பண்ணை போந்தனவே' என்பது பரிபாடல்.

தேவநேயப்பாவாணர் கூறுவது:

பண் என்னும் வினைச்சொல்லினின்றும், திருந்த அல்லது இனிதாய்ச் செய்யப்பெற்றது என்னும் பொருளில் பண்ணை என்னும் நிலப்பெயரும், பண் என்னும் இசைத்தமிழ் அமைப்பின் பெயரும் தோன்றியுள்ளன.என்று பண்ணை என்ற சொல்லிற்கு விளக்கப்பொருள் கூறுகிறார்.

இவ்வாறாக, தொல்காப்பியர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்த இசைச்செய்தி இன்றுவரை மறையாது நம் தமிழிசையில் தொடர்ந்து வருவதைக் காண்கிறோம். இது போன்ற அறிய பகுதிகளும் சொற்களும் நிரம்ப பெற்றது நம் தமிழிசை. அதைக் கற்பதும் பேணிக் காப்பதும் நம் தலையாய கடமையாகும்.

சான்றுப் பாடல்கள் ( பெண்கள் குழுப் பாடல்கள் )

1) சாந்து பொட்டு - சீவகங்கைச்சீமை

2) முத்துமுத்தா – அன்னக்கிளி

3) வாராய் என் தோழி – பாசமலர்.



13.06.2022 அன்று நடந்த ஆசிரம நிறுவனர் நினைவு நாள் மலரஞ்சலி



## காந்தியின் ரூபங்கள்

இன்றைய குழந்தைகளை உங்களுக்குப் பிடித்த தேசத் தலைவா் யாா் என்ற கேள்வியோடு நோக்கினால் காந்தி தாத்தா என்ற பதில் தான் வரும் அதே குழந்தைகளிடம் காந்தி தாத்தா நமக்கு என்னவெல்லாம் தந்துள்ளாா் என்று கேட்டால் சுதந்திரம் வாங்கி கொடுத்தாா் என்ற பதில் மட்டுமே வரும். குழந்தைகள் மட்டுமல்ல பெரும்பாலான இளைஞா்களும் இதில் விதிவிலக்கல்ல.

மகாத்மா காந்தியடிகள் பெற்றுத் தந்த சுதந்திரத்தை விட பலமடங்கு மதிப்புமிக்க தனது வாழ்க்கையை நமக்காக திறந்த புத்தகமாக தந்துள்ளாா் என்பதே முக்கியம். பாரீஸ்டா் பட்டம் பெற்ற வக்கீல் தன்னிடம் வந்த கட்சிக்காரா்களுக்காக வாதாடி வெற்றி பெற்றுத் தந்து அதன் மூலம் இன்றைய மதிப்பில் பலகோடிகளை சம்பாதித்து ராஜவாழ்க்கை வாழ்ந்திருக்கலாம்.

ஆனால் அவ்வாறில்லாமல் தேவையற்ற வழக்குகளைத் தவிா்த்து நீதிமன்றத்திற்கு வெளியே சமாதான உடன்பாடுகளை செய்து கொள்ளுங்கள் என புத்தி சொல்வாராம். தான் இந்து மதத்தை சோ்ந்தவராக இருப்பனும் இந்து, கிருஸ்த்துவ, இஸ்லாமிய, பாரசீக, புத்த மத நூல்களையும் சான்றோரின் நூல்களையும் கற்று அற வாழ்க்கைக்கு தன்னை தயாா் படுத்திக் கொண்டாா்.

தான் மட்டுமின்றி தன்னைச் சாா்ந்தவா்களுக்கும் உதாரணமாக வாழ்ந்தாா். இதற்காக தென்ஆப்பிரிக்காவில் ஓா் ஆசிரமத்தை உருவாக்கினாா். அதில் சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி இந்துக்கள், கிருஸ்த்துவா்கள், இஸ்லாமியா்கள், பாரசீகா்கள் என அனைவரும் ஒரு பெரிய குடும்பம் போல வாழ்ந்தனா்.

தீண்டாமை கொளுந்து விட்டு எரிந்த அந்த சமயத்திலே அனைவருக்கும் ஒரே சமையலறை, ஒரே சாப்பிடுமிடம் என்பதை வழக்கப்படுத்தினாா். அங்கு தங்கியிருந்தவா்கள் பல்வேறு தொழிலைச் செய்தவா்களாக இருந்தாலும் அங்கத்தினா் ஒவ்வொருவருக்கும் மாதச் செலவுக்கு ரூ.40 மட்டுமே ஒதுக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் பாரிஸ்டருக்கு வருமானம் மாதம் ரூ4000 ஆகும்.

காந்தியடிகளின் கருத்துப்படி மூளைக்கு வேலை கொடுத்தால் மட்டும் போதாது. ஓவ்வொரு மனிதனும் சிறிதளவாவது உடல் உழைப்பில் ஈடுபட வேண்டும் என்கிறாா்.
படித்தவா்கள், படிக்காதவா்கள் என்ற வேறுபாடின்றி எல்லோருடைய பணிகளுக்கும் சம ஊதிய வழங்கப்பட வேண்டும் என விரும்பினாா்.

ஆசிரமத்தில் ஒரு சிறிய வீட்டை புதிதாக கட்டத் துவங்கிய போது அதன் கூரை மேல் முதலில் ஏறியது காந்தியடிகள் தான் பல்வேறு பைகளுடன் கூடிய ஒரு பெரிய சட்டையை அணிந்திருந்தாா்.

அந்தப் பைகளில் சுத்தியல், ரம்பம், துளையிடும் கருவி பல்வேறு ஆணிகளும் ஸ்குருக்களும் அதில் இருந்தன. பல நாட்கள் வெயிலில் வேலை செய்து அந்த வீடு உருவானது.

ஒரு முறை தனது அறைக்கு ஒரு புத்தக அலமாறியை செய்ய விரும்பினார். அதற்காக யாருடைய உதவியையும் எதிர்பார்க்கவில்லை. 7 மணி நேரம் கடுமையான உழைப்பினால் கூரையை தொடும் அளவிற்கு பெரிய அலமாரியைத் தனி ஒருவராக தயாரித்து விட்டார்.

ஒரு முறை ஆசிரமத்திலிருந்து தெரு வரைக்கும் உள்ள பாதையை சரளைகள் பரப்பி அமைக்க விரும்பினார். ஆனால் அதற்கு அதிக செலவு ஆகும் என திட்டமிடப்பட்டது. அதற்கு பதிலாக தினசரி காலை நேரத்தில் வெளியே நடந்து விட்டு திரும்பி வரம் நேரத்தில் கையில் கொஞ்சம் கற்களைக் கொண்டு வந்து சேர்க்க துவங்கினார்.

இதனைப் பார்த்த ஆசிரமத்தில் இருந்த அனைவரும் அவரைப் பின்பற்றினால் குறைந்த காலத்திலேயே சரளைக் கல் பாதை தயாராகி விட்டது. வாழும் முறையை சொல்லித் தருவது முதல் ரகம், வாழ்நது காட்டுவது இரண்டாம் ரகம் இதில் காந்தியடிகள் இரண்டாவது ரகமாவார்.

‘‘உடல் உழைப்பு செய்பவர்களை நாம் தாழ்ந்தவர்களாக கருதுவதால் அவர்களின் பணியில் சிறப்பையும், மேன்மையையும், கலாச்சாரத்தையும் அவமதித்து விட்டோம் தொழில் வல்லுனர்களை உயர்ந்தவர்களாகவும் கருதி நமக்கு நாமே அடிமைத் தனத்தை வளர்த்துக் கொண்டு விட்டோம் என்பது காந்தியடிகள் கருத்து.

இதவே தான் நமது தொண்டர் கோ.வே. யின் மனநிலையுமாகும். எனவே தான் காந்தியடிகள் துவங்கிய ஆசிரமங்களைப் போலவே தே.கல்லுப்பட்டியில் காந்திநிகேதன் ஆசிரமத்தை துவங்கி அவரது சொல்படி நடந்து வந்தனர். செய்யும் பணியைக் கொண்டு எந்த விதமான ஏற்றத் தாழ்வுகளையும் கொள்ளாமல் எல்லாத் தொழில்களும் நடைபெறும் இடமாக உருவாக்கினார்கள். அதிலும் ஆசிரியர்கள், பேனா பிடிக்கும் அலுவலர்களுக்குக் கூட அந்த எண்ணம் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சிரம தானத்தை செயல்படுத்தி வந்துள்ளார்கள்.

நான் தற்போது ஆசிரியராக இருப்பினும் மண்வெட்டி, விளக்குமாறு என எதையும் எடுப்பதற்கு சிறிதளவும் தயக்கம் காட்ட மாட்டேன். இதற்கு காரணம் நான் ஆசிரமத்தின் முன்னாள் மாணவன். இத்தகைய எண்ணம் எனக்கு ஏற்பட்டு வளர்ந்ததற்கு காரணம் காந்தியடிகளும், தொண்டர் கோ.வேயும் மற்றும் ஆசிரமத்தை வளர்த்தெடுத்த பெரியோர்களுமே.

இந்த தொடர் கட்டுரையில் காந்தியடிகளின் பல ரூபங்களை காண இருக்கிறோம்.

தொடரும்...

## ஆசிரம விவசாய பணிகளில் சில

















## குளிர் பிரதேச பழப்பயிர்கள் -ஓர் கண்ணோட்டம்



S.ராம்குமார்
தோட்டக்கலை
விரிவுரையாளர்

### பழப்பயிர்களின் முக்கியத்துவம்

பழப்பயிர்கள் அவை வளர்க்கப்படும் தட்ப வெப்ப சூழ்நிலைக்கேற்ப வகைப்படுத்தப்படுகிறது. குளிர்பிரதேச பழங்கள் அல்லது மலைப்பகுதி பழவகைகள், தட்பவெப்ப மண்டல பழவகைகள், மிததட்பவெப்ப மண்டல பழவகைகள் மற்றும் வறண்ட நில மற்றும் மானாவரி நில பழவகைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

இந்தியா அளவில் சுமார் **4.96** மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் சுமார் **49.29** மில்லியன் டன்கள் பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் தமிழ்நாட்டில் மட்டும் **2.24** லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் **44.6** லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு **9.9** டன்கள் உற்பத்தி ஆகிறது.

**2020** –ன் நமது மக்கள் தொகை எண்ணிக்கையினை உத்தேசமாக **50** மில்லியன் டன்கள் பழங்கள் தேவைப்படுமென கணக்கிடப்படுகிறது. ஊள்நாட்டுத் தேவைகளுக்கும் ,ஏற்றுமதி தேவைகளுக்கும், பதப்படுத்துதல் மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்வது போன்றவகைகளில் பழப்பயிர்களின் தேவை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதன் மூலம் அதிக பரப்பளவில் பழப்பயிர்கள் பயிர் செய்வதுடன் மட்டுமல்லாமல் தனி நபர் வருமானமும் ,வாழ்க்கைத்தரமும் அதிகரிக்க நல்ல வாய்ப்பாக அமைகிறது. செயற்கை உரங்கள்,' பூச்சி மருந்துகள், நோய் தடுப்பு மருந்துகள் போன்றவைகளை பயன்படுத்தி பழங்களில் நச்சுப்பொருட்கள் சேர்ந்து நமது உடல் ஆரோக்கியத்தினை சீர்குலைக்கும் நிலைக்கும் தள்ளப்படுகிறோம் .

அதனால் தற்போது இயற்கை வழியிலான விவசாய முறைகளை பின்பற்றி நல்ல சத்தான பழங்களை உற்பத்தி செய்வதன் மூலம் நமது அன்றாட வாழ்க்கையில் பழங்கள் அதிக அளவில் பயன்படுத்தி நமது உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்க செய்யலாம். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இயற்கை வழியில் விளைவிக்கப்பட்ட பழங்களுக்கு அதிக கிராக்கிஉள்ளது. பழங்கள் நமக்கு வருமானத்தை தருவதுடன் அதிக அளவிவ் வேலைவாய்பினை உருவாக்கவும் உதவுகிறது.

நமக்கு வைட்டமின் சத்துக்கள் , உடலுக்கு தேவையான ஆற்றல், நோய், எதிர்ப்பு சக்தியினையும் கொடுக்கிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தின் பரிந்துரையின்படி சராசரியாக **120** கிராம் பழங்கள் நமது அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென

கூறுகிறது. தோட்டக்கலை இயக்கத்தின் நல்ல திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அதிக அளவில் உற்பத்தி செய்து நல்ல வருமானத்தினையும் ஈட்டலாம்.

தோட்டக்கலையின் புதிய வாய்ப்புகள்

தற்போது நமது உணவு பாதுகாப்பிற்காக தேவையான அளவு தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியும் தேவையான சத்துக்களை கொடுப்பதற்கான திட்டமும் சேர்த்து செயல்படுத்த வேண்டியுள்ளது. நமது ஒட்டுமொத்த உற்பத்தியில் 13.08% பரப்பளவில் 28% ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் தோட்டக்கலைபயிர்கள் பங்கு வகிக்கிறது. மொத்த ஏற்றுமதியில் 37% பங்கு வகிக்கிறது.

ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் உலக அளவில் இரண்டாவது இடத்தில் பழங்கள் காய்கறிகள் உற்பத்தியில் உள்ளது. ஏற்றுமதியிலும் பெரும் பங்கு வகிக்கிறது .

உயர் தொழில்நுட்ப தோட்டக்கலை தொழில் நுட்பங்களை பயன்படுத்தவும் ,ஒருங்கிணைந்த உரமேலாண்மை, பூச்சி நோய் மேலாண்மை ,கட்டுப்படுத்தப்பட்ட சீதோஷ்ணநிலையில் தோட்டக்கலைப்பயிர்கள் வளர்ப்பு, துல்லிய பண்ணையம், சீரிய நீர்பாசன முறைகள், அதிக விளைச்சல் தரக்கூடிய கலப்பின விதைகள், வீரிய ஒட்டு ரகங்கள் மற்றும் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புகொண்டுள்ள ரகங்களை பயன்படுத்தி அதிக மகசூலும் அதிக லாபமும் பெறலாம்.

**ஆப்பிள்**

இந்தியாவில் பயிரிடப்படும் பழங்கள் மா, எலுமிச்சை, வாழை இவற்றுக்கு அடுத்தபடியாக ஆப்பிள் இருக்கிறது. சுமார் 2.31 லட்சம் ஹெக்டேரில் மொத்தமாக 13.8 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஜம்மு காஷ்மீர் ,ஹிமாசலபிரதேசம், உத்ராஞ்சல் மற்றும் அருணாசல பிரதேசம் மாநிலங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் நீலகிரி மலைப் பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது.

நமது தேவைக்காக நாம் இன்னும் இறக்குமதி செய்யும் சூழலில் உள்ளோம். ஆப்பிள் பழங்கள், ஆப்பிள் ஜீஸ் போன்றவையும் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆகவே நமது உற்பத்தியினை பெருக்கி நமது வருமானத்தை அதிகரிக்க வாய்ப்பள்ளது. அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவதற்கும் அதிக வாய்ப்புகள் உருவாகியுள்ளது.

## இதர பழங்கள்

பேரிக்காய், பிளம்ஸ், பீச், மங்குஸ்தான், ஸ்ட்ராபெரி, தாட்பூட் பழம், ஐவிரலி ,துரியன், வெண்ணெய் பழம் போன்ற இதர பழங்களுக்கும் உள்ளூர் சந்தை வாய்ப்புகளும் ‘பதப்படுத்தப்பட்டு மதிப்பூட்டப்பட்ட பொருட்கனாக மாற்றி விற்பனை செய்யும் நல்ல வாய்ப்புகள் உள்ளது. ஏற்றுமதி சந்தை வாய்ப்புகளையும் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல உற்பத்தியினையும் அதிகரித்து நல்ல லாபம் அடையளாம்.

**குளிர்பிரதேச பழங்களை அதிகளவில் பயிரிட்டு அதிக லாபம் அடைவோமாக.**





**ஆசிரம நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் வே.வெங்கட் ராமகிருஷ்ணன் ஐயா அவர்கள் ஆசிரம பகுதிகளை பார்வையிட்டு தேவையான ஆலோசனைகள் வழங்கினார்.**





**29.01.2022 அன்று ஆசிரமத்தில் நடைபெற்ற சிரமதான நிகழ்வில் எமது பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆசிரம வளாகத்தில் தூய்மை பணியில் ஈடுபட்ட போது எடுத்த படம்.**

## நட்பு சிறக்க

மனித உணர்வுகளில் நட்பு மிகவும் அழகானது. குடும்பம் இல்லாத மனிதர்கள் கூட இருக்கலாம். ஆனால் நட்பு இல்லாத மனிதர் என்று ஒருவர் இருக்கவே முடியாது. உண்மையான நட்பு எதிர்பார்ப்பு அற்றது. நம் மன ஆரோக்கியத்துக்கும் தனிப்பட்ட வாழ்க்கையின் உயர்வுக்கும் 'நட்பின் ஆரோக்கியம்' மிகவும் அவசியம் .



நா.பாக்கிய லட்சுமி
ஆசிரியை

**மதீப்பீடு செய்யாதீர்கள்**

ஐந்து விரல்கள் ஒன்று போல் இல்லை. அது போல் தான் மனிதர்களும் முக்கியமாக நண்பர்கள். மனிதர்களின் விருப்பும் வெறுப்பும் இயல்பும் அவர்கள் வளர்ந்த விதம் குடும்பச் சூழல், இருக்குமிடத்தைப் பொறுத்து மாறுபடும். அவர்களின் இயல்புகள், பழக்க வழக்கங்களை அணுகுவது நட்பை நிலைக்கச் செய்யும்.

**மறப்போம் மன்னிப்போம்**

தவறு இழைப்பதும் அதை உணர்ந்து திருத்திக் கொள்வதும் மனிதர்களின் அடிப்படை இயல்பு. எனவே நண்பர்களின் தவறைப் பெருந்தன்மையோடு அணுகுவது நட்பு செழிக்க உதவும்.

தவறை ஒரு போதும் பூதக்கண்ணாடி கொண்டு அணுகாதீர்கள் நண்பர்கள் மன்னிப்புக் கேட்டால் அதைப் பெருந்தன்மையோடு மன்னித்துப் பழகுங்கள் உங்களுடைய மன்னிப்பு நட்பையும் உங்களையும் மேன்மைப்படுத்தும்.

**மனம் விட்டுப் பேசுங்கள்**

வாழ்க்கையில் எல்லாப் பொழுதுகளும் இனிமையாக இருப்பதில்லை. நட்புக்கு இது பொருந்தும் கருத்து வேறுபாடுகள் நட்பிலும் ஏற்படும். அதைக் கையாளும் விதம், நட்பையும் உங்களையும் பலப்படுத்தும். கருத்து வேறுபாடுகளை மனம் விட்டுப் பேசுங்கள் அதன் பின் யார் பக்கம் நியாயம் உள்ளது என்பது உங்களுக்குப் புரியம். அந்தப் புரிதலே கருத்து வேறுபாடுகளை அகற்றும் நட்பை வலுப்படுத்தும்.

**காது கொடுத்துக் கேளுங்கள்**

மனத்தில் புதைந்திருக்கும் அழுக்குகளையும் மனத்தில் தோன்றும் ஆக்கப்பூர்வ எண்ணங்களையும் எவ்விதத் தயக்கமுமின்றி நண்பர்களிடம் தான் பகிர முடியும். மனம் விட்டுப் பேசுவது துக்கத்தை அகற்றும். கவலையைக் களையும், மகிழ்ச்சியைப் பெருக்கும். எனவே நண்பர்கள் பேசுவதைச் செவிசாய்த்துக் கேட்க எப்போதும் தயாராக இருங்கள்.

**கடமை**

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் இழப்புகளும் பின்னடைவுகளும் நம்மைச் சோர்வடையச் செய்யும். அந்தச் சோர்வு அளிக்கும் மன அழுத்தத்திலிருந்து மீள்வதற்குப் பெரும் முயற்சிகள் தேவை. முயற்சிகளின் போதாமையால் சிலரின் வாழ்வு அச்சோர்விலேயே தேங்கிவிடும்.

ஒரு வேளை உங்கள் நண்பர் அத்தகைய சோர்வுக்குள்ளாவார் என்றால் அதிலிருந்து அவரை மீட்க முயல்வது நட்பின் கடமை. எனவே 'உனக்காக நான் இருக்கிறேன்' என்கிற நம்பிக்கை ஏற்படும் விதமாக உங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளுங்கள் இவை அனைத்தும் நட்புடன் நாம் இருக்க உறுதுணையாக இருக்கும்.

## மனதில் உறுதி வேண்டும்




க.ஜெயந்தி,
ஆசிரியை

எப்போதும் மனதில்
பாசிட்டிவ்வாக யோசித்தால், எந்த ஒரு செயலையும்
துணிந்து  செய்யலாம்.
உதாரணமாக நமது மனம் நெகட்டிவ்வாக நினைக்கும்
போது ஏதாவது ஒரு தோல்வி
நடந்தாலும் அதை அவ்வளவு சீக்கிரம் மறக்காமல்
இருக்கும். இதனால் எந்த செயலை
செய்யும் போதும் எங்கு தோல்வி கிடைக்குமோ என்று
பயந்து ஈஸியானவற்றைக் கூட
இழக்க நேரிடுகிறது. ஆகவே வாழ்வில் வெற்றியை
நோக்கி முன்னேற என்ன வெல்லாம்
செய்ய வேண்டும் என்று படித்து தெரிந்து
கொள்ளுங்களேன்…
மற்றவர்கள் கூறுவதை கேட்காமல், உங்கள்
உள்ளம் சொல்வதைக் கேளுங்கள், உங்கள்
உள்ளம் என்ன சொல்கிறதோ, அதை செய்யுங்கள்.
மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு
நடப்பதால், வெற்றியை அடைய முடியாது. ஆகவே
உங்கள் மனம் சொல்லும்
வார்த்தைகளைக்கேட்டு, அதன் படி நடக்க வேண்டும்.
உதாரணமாக,உங்களுக்கு
ஏதேனும் ஒரு புதிய விஷயங்களை செய்யும் போது
மற்றவர்கள் முடியாது என்று
நினைப்பதை கூட, நீங்கள் முழுகவனத்தோடு,
செய்து முடிப்பீர்கள்.
எந்த நேரத்திலும் நீங்களே முடிவெடுங்கள்
இதுவரை சிறுவயதில் உங்களுக்கு

உங்கள் வீட்டில் இருக்கும் பெற்றோர்கள் முடிவெடுப்பார்கள். இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். இந்த நேரம் தான் நீங்கள் சுயமாக உங்கள் முடிவுகளை எடுக்க வேண்டிய தருணம். எப்போதும் எதையும் செய்ய முடியவில்லை என்று மற்றவர்களிடம் மன்னிப்பு கேட்காமல், பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும். வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், நினைத்தால் மட்டும் போதாது, சுயமாக முடிவு எடுக்க தெரிந்திருக்க வேண்டும். இது தான் மிகவும் முக்கியமான ஒன்று. மேலே சொன்னது போல், வாழ்க்கையில் முன்னேறும் போது தோல்விகளை சந்தித்து தான் ஆக வேண்டும். அதற்காக அந்த தோல்விகளையே மனதில் வைத்துக் கொண்டு வாழ்க்கையில் இருக்க கூடாது.

‘‘தோல்வி தான் வெற்றியின் முதல் படி’’




தோல்விகளை சந்திக்க சந்திக்க தான் மனம் தெம்பாக, அனைத்தையும் எதிர்த்து நின்று, தைரியமாக செல்ல முடியும். இதனால் வெற்றியையும் எளிதில் அடைய முடியும்.

இன்றைய காலத்தில் நிறைய மக்கள் சோம்பேறித் தனத்துடன், கவனக்குறைவோடு, எதைப் பற்றியும் கவலை இல்லாமல் இருக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு எந்த ஒரு பெரிய பாராட்டையும் பெறப் போவதில்லை. ஆனால் தோல்வியடைந்து விட்டால் மட்டும் அதை நினைத்து மனதை தளரவிட்டு, வாழ்க்கையை வீணாக்குவது.

ஆகவே அவ்வாறு இல்லாமல், மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைப்பதோடு, அடைய வேண்டிய இலக்கை மனத்தில் கொண்டு சுறுசுறுப்பாக செயல் பட வேண்டும்.

‘‘மேற்கூறியவாறெல்லாம் நடந்து வந்தால், வாழ்க்கையில் பெரிய வெற்றியை அடைவதோடு,

வாழ்வில் ஒரு நல்ல நிலைக்கும் வரலாம்''.

## பதனிபருவத்தினரின் இக்கால கட்ட மனநிலை




மதுமிதா –XII-A
பாக்கியதர்ஷினி–XII-A

பதின் பருவம் என்பது 13 முதல் 19 வரையுள்ள வயதாகும். நரம்பியல் நிபுணர் கூற்றுப்படி இக்கால கட்டத்தில் உள்ள பருவத்தினரின் மன வளர்ச்சியானது மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக தூங்குவதிலும், அவர்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதிலும் தேவையற்றதை உண்பதாலும், கெட்ட நண்பர்களுடன் பழக்கம் வைத்துக் கொள்வதாலும் ஏற்படுகிறது.இதைக் கடந்து சமூக ஊடகங்களில் அதிகமாக அவர்களின் தன் ஆர்வமுடன் செயல்படுவதால் அவர்களின் நிலைமை மிகவும் பின் தங்கி உள்ளது என்பதைப் பற்றி இக் கட்டுரையில் காண்போம்.

நோக்கம். பதின்பருவ வயதினர் குழந்தை மனப்பான்மையுடன் செயல்படும் தன்மையுடையவர். மேலும் இவர்கள் மிக வேகமாக மற்றவர்களுடன் ஈர்ப்புத் தன்மை கொண்டவராக இருப்பர். அவர்கள் எதைக் காண்கிறார்களோ அதுவாகவே தன்னை பாவனை செய்யும் மனப்பான்மையுடையவர்கள்.

எளிதாக உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் மாறும் தன்மை உடையவர்கள்.

சமூக ஊடகங்களை காண்பதன் மூலம் அதில் அதிகம் மூழ்கும் தன்மையுடையவராக அதில் பாதிப்புக்குள்ளாகின்றனர். காணும் கதாபாத்திரம் போல் தன்னை மாற்றிக் கொள்ளும் பருவத்தினர்.

இக்காலகட்டத்தில் இவர்களின் தேடல் என்பது சிந்தனைக்கு அப்பாற்பட்டு தவறான பாதையை நோக்கி செல்கிறது. குறிக்கோள் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 90 பதின்பருவ மக்கள் சமூக ஊடகத்தை பயன்படுத்துகிறார்கள்.

சமூக இணையதளம், வேலை மற்றும் கல்விசார்ந்த நிறுவனம் மற்றும் தேடல்களுக்கும் மற்றவர்களுடன் உரையாடுவதற்கும் பயன்படுத்தப்பட்ட சமூக ஊடகமானது தற்போதைய காலக்கட்டத்தில் எதிர்பார்க்காத ஒரு இலக்கை நோக்கிச் செல்கிறது.

இதனால் பதின்பருவத்தினர் அதில் அதிக ஈடுபாடுடன் ஈடுபடுவது உலகளவில் அதிக பாதிப்பையும் அவர்கள் மன அளவில் பின்தங்கிய நிலைமையையும் உருவாக்கி எதிர்காலத்தை எதிர்கொள்ளும் சவால்களிலிருந்து தன்னைக் கோழையாக்கிக் கொள்ளும் மனோபாவத்தில் தள்ளப்படுகிறார்கள்.


<u>தீர்வு</u>

பெற்றோருடன் நேரம் கழித்தல் மூலம் சமூக ஊடகத்தை தவிர்க்கலாம்.

சரியாக படிப்பதன் மூலம்.

குடும்ப சூழ்நிலைகளை உணர்வதன் மூலம்.

விளையாட்டுகளில் ஈடுபடுவதன் மூலம் இதை இப்பருவத்தினர் தவிர்க்கலாம்.



## கற்றதனாலாய பயன்?...

ஆசிரியர்களுக்கான பயிலரங்கம் அது.

“ஏன் நீங்கள் கற்பிக்கிறீர்கள்?” என்று அப்பயிலரங்கை வழிநடத்தியவர் வினவினர் அனைவரும் சிறிதுநேரம் அமைதிகாத்தனர்..

‘ மாணவர்கள் நல்லவேலைக்குச் செல்ல அவர்களை ஆயத்தம் செய்ய.என்று ஒருவர் அமைதியை உடைத்தார்..



திரு.அரிஅர வேலன்

சமுக – கல்விச் செயற்பாட்டாளர்

‘அவர்கள் வசதியாக வாழ்வதற்கு.. “என்று இன்னொருவர் தொடர்ந்தார்..

‘அப்பொழுதுதான் எங்களுக்குச் சம்பளம் கிடைக்கும். “என்று கலகலப்பூட்டினார் மற்றொருவர்.

பின்னர்ஆளாளுக்கு ஏதேனும் கூறத் தொடங்கினர். வழி நடத்துநர் அமைதியாக அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்தார்..

ஒருவர் ‘மாணவர்களின் அறிவை வளர்க்க ..”என்றதும் ‘கல்வியின் நோக்கம் அறிவை வளர்ப்பது மட்டுந்தானா? என்று வினவினார் வழிநடத்துநர்..

மறுபடியும்அரங்கிற்குள் அமைதி குடிபுகுந்தது. ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக்கொண்டனர்.

“அப்புறம் எதுக்கு..? அதுக்குத்தான்! என்ற கலகலப்பூட்டி புன்னகையோடு அரங்கை ஒருமுறை கண்களால் அளந்தார்.அவரது கண்களை கண்ணோடு நோக்கிய மற்றொருவர் தனது கட்டைவிரலை உயர்த்தி அவரைப் பாராட்டும் பொழுதே ஆளுக்கு ஒன்றைக் கூறத் தொடங்கினர்.கலவையான குரலொலிகளுக்கு இடையில் ,”மாணவர்களை நல்லவர்களாக மாற்றவும் என்று ஒலித்தது ஒரு மெல்லிய குரல்.

அந்தக் குரலுக்கு உரியவரிடம். “அப்படியென்றால் மாணவர்கள் கெட்டவர்களா”என்று வெகுளிபூக்க வினவினார் இன்னொருவர்.

“இல்லை ஆனால் மேலும் நல்லவர்களாக மாற்ற.. ‘ என்றார் முன்னரே இக்கருத்தைக் கூறியவர்.

அவரிடம், “விரலசைவில் தகவல்களைப்பெற வாய்ப்புள்ள இந்த தொழில்நுட்ப ஊழியில் மாணவர்கள் இணையத்திலேயே தங்களுக்கான அறிவைத் தேடிக்கொள்ள முடியுமே. அவர்கள் ஏன் பள்ளிக்கு வரவேண்டும்” என்று வினவினார் வழிநடத்துநர்.

“இணையம் ஆசிரியராக முடியாதே “ என்றார் கலகலப்பூட்டி.

“அப்படியானால் ஆசிரியர் யார்” என்று வினவினார் வழிநடத்துநர்.

“அவர்களின் ஐயங்களைப்போக்குபவர்” என்றார் அதுவரை அமைதியாக இருந்தவர்.

“ஐயங்களைப்போக்குவதற்கான தரவுகளை ஆசிரியர் எங்கிருந்து பெறுகிறார்” என்ற வினாவை வழிநடத்துநர் முடிப்பதற்கு முன்னரே “புத்தகத்திலிருந்துதான்” என்றார் கலகலப்பூட்டி.

“அந்தப் புத்தகத்தை மாணவரே படித்துக்கொள்ள மாட்டாரா?” என்று அவரை மடக்கினார் மெல்லிய குரலார். அரங்கம் சிரிப்பால் நிறைந்தது.

“கல்வி அறிவைத் தருகிறது. ஆனால் அத்தோடு அது நின்றுவிடுவது இல்லை” என்றார் வழிநடத்துநர்.

“சோறும் தருகிறதா….?”என்றார்கலகலப்பூட்டி.

“இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்க உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் அமைதியாக இருங்கள் . நகைச்சுவையாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு இடையூறு செய்யாதீர்கள்” என்று கண்டிப்பான குரலில் கலகலப்பூட்டியை எச்சரித்த மெல்லியகுரலார், “மாணவர்களை நல்லவர்களாக ஆக்கியது என்றேனே” என்றார் வழிநடத்துநரைப் பார்த்து.

“எப்படிநல்லவர்களாக ஆக்குகிறது?” என்று வினவினார் வழிநடத்துநர்.

“கல்வியின் பயன்பாடு நடத்தைமாற்றம் என்று கல்வியியல் பாடத்தில் படித்திருக்கிறோம்” என்றார் அமைதியாளர்.

“எந்த நடத்தைஎப்படி மாறுகிறது?”என்றார்மெல்லியகுரலாளர்.

“எண்ணம்போல் செயல்படும் நடத்தை கல்வியால் இடம்,பொருள், ஏவல் அறிந்து பக்குவமாகச் செயல்படும் நடத்தையாக மாறுகிறது”என்று விளக்கினார் அமைதியாளர்.

“எடுத்துக்காட்டுக் கூறுங்களள்”வேண்டினார் மெல்லியகுரலார்.

“நானே நல்ல எடுத்துக்காட்ட” என்றார் கலகலப்பூட்டி.

“எப்படி?”வினவினார் மெல்லியகுரலார்.

“வகுப்புக்கு இடையூறாக இருந்த நான், இப்பொழுது பொறுப்பாகப் பேசுகிறேனே” என்றாார். கலகலப்பூட்டி.

“அப்படியானால் மாணவர்களைப் பொறுப்புள்ளவராக உருவாக்குவதுதான் கல்வியின நோக்கமா?” என்று வழிநடத்துநரிடம் வினவினார் ஒருவர்.

எல்லோரும் வழிநடத்துநரைப் பார்த்தனர்.

நல்லவா என்றால் யார்டூ'' என்று அவர் வினவ, ''மற்றவர்களுக்கு நன்மை செய்பவர்''என்று ஒரு குரல் மூலையிலிருந்து வந்தது.

''ஒருவருக்குச் செய்யும் நன்மை, வேறு யாருக்கும் தீங்குபயக்க வாய்ப்பிருக்கிறதா?,'' என்று வழிநடத்துநர் மீண்டும் வினவ, ''வாய்ப்பிருக்கிறது'' என்றார் அதுவரை கயேட்டில் படங்களைக் கிறுக்கிக்கொண்டிருந்தவர்.

கலந்துரையாடல் சூடுபிடித்தது.

''அப்படியானால் நல்லவர் என்பது சூழல்சார்ந்ததாடூ'' வினவினார் மெல்லிய குரலார்

''ஆம்'' என்றார் அமைதியாளர்.

''பொறுப்பானவர் என்றால்டூ'' வினவினார் மெல்லிய குரலார்.

''ஒருவரை எப்பொழுதுபொறுப்பானவர்என்று கூறுவீர்கள்டூ'' என்று வினவினார் வழிநடத்துநர்.

''ஒரு செயலை உரிய நேரத்தில் உரிய முறையில் நிறைவேற்றுபவரை''வரையறுத்தார் கலகலப்பூட்டி.

''அதனால் அவருக்கு இழப்போ வந்தாலும்அதனைஅவர்செய்வாரா'' வினவினார் ஓவியர்.

''செய்வார்'' என்று அழுத்தமாய்க் கூறினார் மெல்லியகுரலார்.

''நல்லவருக்கும் பொறுப்பானவருக்கும் இடையே உள்ள வேறுபாடு இப்பொழுது புரிந்ததா'' என்று வினவினார் வழிநடத்துநர்.

''புரிகிறது'' என்று கூறிய மெல்லியகுரலார், ''ஒருவர் பொறுப்பானவராக இருப்பதற்கு அறிவுத்திறன்மட்டும் போதாதா'என்று வினவினார்.

''போதாது'' என்றார் ஓவியரிடம், ''ஏன்'' என்று வினவினார் அதுவரை வழியே தெரியும் வேப்பமரத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்.


''அறிவுத்திறனால் சிந்திக்கலாம். ஆனால் பொறுப்போடு இருக்க உணர்வுகளையும் கையாளத்தெரிய வேண்டும்'' என்றார் ஓவியர்.

''சமூகத்தோடு இயைந்து இயங்க வேண்டும்'' என்று கருத்தாகக் கூறினார் கலகலப்பூட்டி.

''அப்படியானால், மாணவர்களுக்கு அறிவுத்திறனையும் உணர்வுகளுக்கு ஈடுகொடுக்கும் திறனையும் சமூகத்திறனையும் ஒருசேர வழங்குவதுதான் கல்வியின் நோக்கமா?'' என்று வழி நடத்துநரை வினவினார் மெல்லியகுரலார்.

''ஆம்'' என்றார் வழிநடத்துநர்.

அந்த அமர்வு நிறைவுபெற்றது.






**எல்லாவற்றுக்கும் அறம்தான் அடிப்படை.**
**அந்த அறத்துக்கே உண்மைதான் அடிப்படை.**